4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) இவ்வளவு நேரம் பேசியாகிவிட்டது. திரும்பவும்* clarification *கேட்டால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அமைச்சர் இவ்வளவு நேரம் பதில் சொல்லியிருக்கிறார், அதற்குப் பிறகும் சந்தேகமா? (குறுக்கீடுகள்)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை-பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் அதைப் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்வேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)* Zero hour-*ஐ எல்லாம் தாண்டி வந்தாகிவிட்டது, இனிமேல் முடியாது. அனுமதியில்லை. அமைச்சர் பதிலுரை அளித்ததில்* clarification *ஏதாவது கேட்க வேண்டுமென்றால், கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *4-5-2010-ல்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியாது. என்னிடம் 4-5-2010 அன்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். காலை 9-08-க்கு கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் பார்த்து எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோயம்புத்தூர் பஞ்சாலை சம்பந்தமாக உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்குக்*

காலையிலேதான் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் ஆய்வினை முடித்து அதை எடுக்கக்கூடிய தகுதி இருந்தால் எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதற்காகவெல்லாம் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொல்கிறேன், அதற்குப் பிறகும் நீங்கள் எடுத்தாக வேண்டுமென்றால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்குச் சொல்கிறேன், இப்போது ஆய்வில் இருக்கிறது. எடுக்கக்கூடிய தகுதி இருக்கிறதா, இல்லையா என்பதைக் குறித்து நாளைக்குச் சொல்கிறேன், உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு ஒரு நெடிய விளக்கத்தைத் தந்தார்கள். அதிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் இருக்கக்கூடிய சந்தேகம் என்னவென்று சொன்னால். . . (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையனிடமும் சொல்கிறேன். நீங்கள் காலையிலே என்னை வந்து பார்த்துச் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன். அதையெல்லாம் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். அதுசம்பந்தமாக நீங்கள் கோர்ட் தீர்ப்பு குறித்தெல்லாம் சொல்லி

இருக்கிறீர்கள். கோர்ட் தீர்ப்பு நகல் எதையும் அதிலே வைக்கவில்லை. பார்த்துவிட்டு அதற்குப் பிறகு நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சதன் திருமலைக்குமார் அவர்களும் கொடுத்திருக்கிறார். அவரிடமும் கோர்ட் தீர்ப்பு இருக்கிறதா என்று கேட்டேன். அவர் கோர்ட் தீர்ப்பு சம்பந்தமாக இப்போதுதான் என்னிடம் சொல்லிவிட்டுப் போகிறார்; நாளை அல்லது நாளை மறுநாள் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிறார். நீங்கள் எந்த அடிப்படை record-ம் இல்லாமல் சும்மா ஒரு பேப்பரில் எழுதிக் கொடுத்தால் எடுக்க முடியுமா, என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Authenticated record வேண்டும். நான் எடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பார்ப்பதற்கு, பரிசீலனை செய்ய வேண்டுமென்றால், authenticated record எனக்கு இருக்க வேண்டும். உட்காருங்கள்.

முற்பகல் 11-15

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்—*தொடர்ச்சி*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தைப் பற்றியும்,* Food Adulteration Act-ஐப் பற்றியெல்லாம் இங்கே தெளிவாக, நீண்ட விளக்கத்தினை அளித்திருக்கின்ற மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இரண்டு கருத்துகளை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார்கள். ஒன்று, ஏற்கெனவே Food Cell C.I.D.-ஐச் சார்ந்திருக்கின்ற போலீஸ் அதிகாரிகள், அதுபோல, சுகாதாரத் துறையும் இணைந்து இவர்கள் . . . (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் அந்தத் தீர்ப்பைக் கொடுப்பதற்கு ஒரு வழியைப் பாருங்கள். தீர்ப்பை நான் பார்க்க வேண்டும். அந்தத் தீர்ப்பிலும், 'if it is pending in a court' என்று

இருந்தால், நான் அதையும் எடுக்க முடியாது. அதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)* அதில் final disposal வந்திருக்கின்றதா, இல்லையா, என்ன direction கோர்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். என்பதையும் நான் பார்த்ததற்குப் பிறகுதான் அதை எடுக்க முடியும். *(குறுக்கீடுகள்)* இப்போது அனுமதியில்லை, நீங்கள் சொல்லுங்கள். திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* நான் பேசுவதே கேட்கவில்லை. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* எனக்கு authenticated record வேண்டும். நீங்கள் அதை இன்றைக்குக் கொடுத்தீர்கள் என்று சொன்னால், நாளைக்குப் பரிசீலனை செய்த பின்பு எடுக்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர்கள் யாரும் அதற்கான பதிலை சொல்லக்கூடிய நிலைமையில் இன்றைக்கு இல்லை. அதிலும் குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் அவையில் இருந்து பதில் சொல்லவேண்டிய ஒரு பிரச்சினை. அவர்கள் அவையில் இல்லாத நிலையில், நாளையதினம் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம் என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று. அதற்குமுன் நீங்கள் கோர்ட் தீர்ப்பினைக் கொண்டு வர வேண்டும். அதனையும் பரிசீலனை செய்யாமல் எடுக்க முடியாது.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.